# ஒரிஸா மாநிலத்தில் கந்தன் வழிபாடு

## ( Skanda worship in Orissa )

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : டாக்டர் கைலாஷ் பட்நாயக், மேற்கு வங்காளம்

தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com)

ஒரிஸா மாநிலத்தில் உள்ள மக்கள் முருகப் பெருமானை கார்தகேயா அல்லது கார்திகா என்று அழைக்கின்றனர். சிலை வழிபாடுகள் இல்லாத இடத்தில் கூட, எந்த மாதிரியான சமூக வாழ்வில் உழன்று கொண்டு இருந்தாலும், எந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களாக அவர்கள் இருந்தாலும் கூட, கடவுள் மீது நம்பிக்கை இருப்பதால் பக்தி என்ற மார்கத்தில் இணைந்து உள்ளனர்.



கார்த்திகேயக் கடவுள்

ஒரிஸா மாநிலம் தென் இந்தியாவில் உள்ள ஆந்திராவுடன் நெருங்கிய உறவு கொண்டு உள்ளது. மூன்றாம் நூற்றாண்டில் ஆந்திர மாநில மன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்த ஒரிஸா மாநிலம், கிபி 1484 ஆம் ஆண்டில் புருஷோத்தம தேவா என்ற ஒரிஸா மன்னனால் பெருமளவு மீட்கப்பட்டது. அதன் பின் பல ஆண்டுகள் கிரிஷ்ணதேவராயர் ஒரிஸா மன்னர்களுடன் போரிட்டு வந்த பின், பிரதாப ருத்திர தேவா என்ற ஒரிஸா மன்னனுடன் போர் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு, ஒரிசா-ஆந்திர மாநிலங்களுக்கு இடையில் எல்லைகளை நிறுவினார். ஆக தென் இந்தியாவுடன் சமூக, கலாசாரங்கள் அனைத்திலும் ஒரிஸா மாநிலம் தொடர்பு வைத்து இருந்தும் கூட கார்திகேயா என்கின்ற முருகப் பெருமானின் புகழ் அங்கு பரவவில்லை.இத்தனைக்கும் தென் இந்தியாவில் கார்திகேயப் பெருமான் மிக முக்கியமான தெய்வமாக வணங்கப்படுபவர். சிவன், பார்வதி, மங்களா தேவி போன்று தினமும் பூஜிக்கப்படும் கடவுளாக கார்த்திகேயர் ஏற்கப்பட்டாலும் கார்த்திகேய வழிபாடு வேறு வகையில் நடைபெறுகின்றது. அங்கு பெரும்பான்மை இனத்தவர்

இந்துக்கள். பெருமை வாய்ந்த பல ஆலயங்கள் சூழ்ந்த பூமி ஒரிஸா என்றாலும் கார்த்திகேய கடவுளுக்கு தனி ஆலயம் எதுவும் அங்கு இல்லை.

பொதுவாகவே இந்தியாவில் ஒவ்வொரு பகுதியிலும் உள்ளவர்கள் சில காரணங்களுக்காக சில தெய்வ வழிபாடு செய்வது உண்டு. அவர்கள் வணங்கும் தெய்வங்கள் கூட குறிப்பிட்ட காரணங்களுக்காகவே அமைந்து இருக்கும். மழை பெய்யாவிடில் அதற்கு ஒரு கடவுள், அறுவடை செய்யும் காலங்களில் மற்றொரு கடவுள் என்று பல உதாரணங்களைக் கூறலாம். அது போலவே கந்தனுக்கு தனிக் கோவில் இல்லாத ஒரிஸாவில் குழந்தை பாக்கியம் வேண்டும், முக்கியமாக ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காக அவர்கள் பிரார்தனை செய்வது கார்திகேயப் பெருமானிடம்தான். ஒரிஸாவிலும் இடங்களுக்கு ஏற்ப கார்திகேய வழிபாட்டு முறை மாறி இருந்தும் கூட, பூரி மாநிலத்தில் மட்டுமே அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் கார்திகேய வழிபாடு அமைந்து உள்ளது.


கார்த்திகேயக் கடவுள்

குழந்தை செல்வமற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை கார்திகேய விரதத்தினை துவங்கி பின்னர் சில சடங்குகளை கடை பிடிக்க வேண்டும். முதலில் புரோகிதர்கள் வந்து கார்த்திகேய பூஜை புனஸ்காரங்கிளத் துவக்கி வைக்க, கடவுள் வழிபாடு துவங்குகின்றது. தம்பதியர் தெய்வத்திற்கு மலர் மாலைகளை அணிவித்து பிரார்தனை செய்கின்றனர். மறுநாள் முதல் பண்டிதரே பூஜைகளைச் செய்கின்றார்.

அவரவர் சக்திக்கு ஏற்ப பழங்கள், இனிப்புக்கள், அரிசி, கோதுமைகளினால் செய்த பண்டங்கள் எனப் பலவற்றை பிரசாதமாகச செய்து பூஜைகள் செய்கின்றனர். என்ன பிரசாதம் படைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவரவர் வசதிக்கு ஏற்ப அதை செய்கின்றனர். ஏழு நாட்கள் தொடரந்து நடை பெறும் அந்த பூஜை, பௌர்ணமிக்கு பத்தாம் நாள் துவங்கி அமாவாசைக்கு முதல் நாள் அனறு முடிவடைகின்றது. அந்த பூஜை செய்ய, துலா அதாவது கார்திகை மாதங்கள் சிறந்தவையாகக் கருதப் படுகின்றது. ஆனால் ஒரிஸாவின் வடக்குப் பகுதிகளில் பலசோர் என்ற

கரையோறப் பகுதிகளில் உள்ளவர்களசெய்யும் பூஜை பூரியில் செய்யப்படுவதில் இருந்து மாறுபட்டு உள்ளது. மழலைச் செல்வம் கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்யும் பூஜை, மார்சிகா எனப்படும் விருச்சிக மாத முதல் நாள் மாலைத் துவங்கி மறு நாள் விடியும் வரை மட்டுமே நடை பெறுகின்றது. அதாவது ஒரே ஒரு நாள் பூஜையாக நடை பெறுகின்றது. ஒரு நாள் என்பது பிரஹாரா எனப்படும. அதை எட்டுப் பகுதிகளாகப் பிரித்து, இரவில் மட்டும் நடக்கும் அதை நான்கு பிராஹார பூஜையாக நடத்துகின்றனர். நான்கு பகுதிகளாக நடக்கும் பூஜையின் முக்கிய அம்சம என்னவெனில் ஹோம்ம துவங்கும் முன் மழலைச் செல்வம் கிடைக்க வேண்டும் என விரதம் இருக்கும் கணவன் அல்லது இருவரும் நான்கு வேளையும் பூஜை ஆரம்பிக்கும் முன் குளிக்க வேண்டும். பூஜைக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் என்ன தெரியுமா ? நான்கு கத்திகள், பலவேறு விளையாட்டுப் பொம்மைகள், நான்கு இடங்களில் இருந்து கொண்டு வரப்படும் மண் முதலியவை ஆகும். கார்திகேயப் பெருமான் , சேனையின் அதிபதி என்பதால் அந்த பூஜையில் நான்கு கத்திகள், பலவேறு விளையாட்டுப் பொம்மைகளை அவசியம் பயன்படுத்த வேண்டுமாம். நான்கு இடங்களில் இருந்து கொண்டு வரப்படும் மண் எங்கிருந்து கொண்டு வர வேண்டும் தெரியுமா ? - பிறக்கும் குழந்தை பலசாலியாக இருக்க வேண்டும் என்பதற்காக, ஒரு மாடு எந்த இடத்தில் பூமி மண்ணில் தன் தலையைத் தேய்த்ததோ, அந்த இடத்து மண் கொண்டு வர வேண்டும். எப்பொழுதுமே ஒருவனை பின் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் இஷ்மி தேவி அவன் விலை மாது வீட்டிற்குள் நுழையும் பொழுது மட்டும் உள்ளே நுழையாமல் வாசலிலேயே நின்று விடுவாளாம். ஆகவே வீட்டிற்குள் நுழையாமல் இஷ்மி தேவி வாசலிலேயே நின்று இருந்த அந்த இடத்து மண் வேண்டும். முன்றாவதாக, பல இடங்களை சந்திக்கும் முனையில் உள்ள இடத்து மண், மற்றும் நான்காவதாக நதிக் கரையில் இருந்து எடுத்து வந்த மண் என்று நான்கு இடங்களிலும் இருந்தும் மண் கொண்டு வரவேண்டுமாம். இவற்றைத் தவிற கர்பத்தைக் குறிக்கும் வகையில் நெல் கொண்டு வரவேண்டும்.

மற்றும் ஒரு முக்கிமான வேண்டுகோளுக்காகவும் கார்த்திகேய விரதம் இருக்கின்றனர். கன்யா மற்றும் அஸ்வினி மாதங்களில் செய்யப்படும் இந்த விரதம், தனக்கு கிடைக்க இருக்கும் கணவன் கார்திகேய கடவுளைப் போலவே பராக்கிரமசாலியாகவும். அழகானவனாகவும் அமைய வேண்டும் என்பதற்காக நடக்கின்றது. தசரா விழாக் கலங்களில் தோன்றும் பூரண சந்திர தினத்தை குமார பூர்ணிமா என்ற பெயரில் அதாவது குமரன், கார்த்திகேயன் என்ற அர்த்தத்தில், அழைத்து அதை ஆடல் பாடல்களுடன் பெரிய விழாவாகக் கொண்டாடுகின்றனர். சிலர் அன்று கோஜாகாரி பூர்ணிமா என்ற பெயரில் கஜலட்மிக்கும் பூஜை செய்கின்றனர் இந்த ஒரு நாள் பண்டிகையை கடை பிடிக்கும் பெண்கள்

காலை வேளையில் அரிசிச் சோறும், சமையல் செய்த மற்ற பண்டங்களை சாப்பிடாமல், தயிர், மோர், பழங்கள் போன்றவற்றையும், இரவில் சமைத்த சைவ உணவும் உட்கொள்ளலாம். சில இடங்களில் இந்த விரதம் பத்ரவ மாதத்தில் ஜன்ஹி ஹோஷாவில் ஆரம்பித்து அஸ்வினியில் குமார பூர்ணிமா வரை, அதாவது ஒரு பௌர்ணமியில் ஆரம்பித்து அடுத்த பௌர்ணமி வரை ஒரு மாதம் கடை பிடிக்க வேண்டும் என்ற விதி உள்ளன. இந்த விரதத்தை எத்தனை முறை கடை பிடித்தாலும் அந்த விரதம் கொண்டாடப் படுவது என்னவோ குமார பூர்ணிமா தினத்தின் அன்றுதான்.

பூஜை நடக்கும் காலத்திற்கு ஏற்ப கிடைக்க இருக்கும் கணவன் அமைவானாம். குமார பூர்ணிமா தினத்தின் மாலையில் சந்திரோதயம் துவங்கியதும் துவங்கி காலை வரை நடக்கும். எத்தனை தாமதமாக அந்த பூஜை துவங்குகின்றதோ அத்தனை வயது முதிர்ந்த கணவனே அமைவான் என்ற நம்பிக்கையும் உண்டு. பூஜைக்கு முக்கியமாகப் பயன் படுத்தப் படுவது துளசிச் செடிதான். ஆதை சில சமயங்களில் சந்திரன் உதயத்தைப் பார்த்து விட்டு உடனே பூஜை துவங்க வசதியான இடத்தில் புததாக நட்டு வைப்பதும் உண்டு. பூஜையில் பயன் படுத்தப்படும் பூவும் வெண்ணிர லில்லிப் பூவாகும். பூஜை முடிந்த பின் பெண்கள் நெற் கதிர்களை கையில் ஏந்தியபடி ஏழு முறை சந்திரனுக்கு அதைக் காட்டி நமஸ்கரிக்கின்றனர். பூஜையை தனித்தனியாகவோ அல்லது சேர்தோ கொண்டாடுகின்றனர் . பூஜை முடிந்ததும் மற்றவர்கள் வீடுகளுக்குச் சென்று பிரசாதங்கள் கொடுத்து மகிழ்ச்சி அடைகின்றனர். புத்தாடை உடுத்திய பெண்கள் ஆடல் பாடல்களுடன் இரவைக் கழிக்கின்றனர். ஆக வேண்டுகோள் நிறைவேற வேண்டும் என்று இரு விதமான பண்டிகைகள் கொண்டாடப் படுகின்றன. குழந்தை செல்வமற்றவர்கள் குழந்தை செல்வம் பெறவும், தனக்கு கிடைக்க இருக்கும் கணவன் அழகானவனாகவும், பராக்கிரமசாலியாகவும் அமைய வேண்டும் என்ற காரணங்களே அவை.

ஓவ்வொரு வருடமும் வரும் ஏழாவது மாதமே கார்த்திகை எனப்படுகின்றது. வெகு புனிதமாக கருதப்படும் இந்த மாதத்தில்தான் அனைத்து மக்களும்- இளம் வயது முதல் முதியோர் வரை, மாதம் முழுவதும் அசைவ உணவு அருந்துவது இல்லை. குறைந்தபட்சம் புனிதமான ஐந்து பஞ்சாங்க தினங்களிலாவது சைவ உணவு மட்டுமே அருந்துகின்றனர். குமார பூர்ணிமாவில் துவங்கும் இந்த விரதம் கார்திகை மாதம் பௌர்ணமி அன்று முடிகின்றது. இந்த புனிதமான மாதத்தில் விரதமிருப்பவர்கள் அனு தினமும் குளித்த பின் அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று பக்தி வழிபாட்டில் ஈடுபடுவர். 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரிசா கவிஞன் மஹாதேவ தாஸா என்பவர் எழுதிய கார்திகா மஹிமா என்ற நூலினையும் படிப்பது உண்டு. மற்றுமொரு புராண நூலான ஸ்ரீமத் பாகவதம் என்பதைப் படித்தும் அல்லது அதை காலட்சேபமாகக் எவராவது கூறுவதைக் கேட்பதும் ஒரு முக்கிய சடங்கு ஆகும். ஸ்ரீமத்

பாகவதத்தை எழுதியவர் மற்றொரு  ஒரிசா கவிஞன் ஜகன்னாத தாஸா 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் . கார்திகை மாதங்களில் வாழை இலைகளில் செய்த சிறு படகுகளில் விளக்கை எற்றி வைத்தோ, எற்றி வைக்காமலோ நதிகளில் அதை மிதக்க விடுவார்கள்.

இந்தியாவில் உள்ள புராண வரலாறுகளில் அரச மரம், ஆல மரம், வேப்ப மரம் போன்றவை எப்படி கார்த்திகேயக் கடவுள் தோன்றியதற்கு ஒரு பின்னணியாக இருந்தன என்றும் செய்தி கூறுகின்றன. அதை மஹாதேவ தாஸாவின் கார்திகா மஹிமாவில் விவரித்து உள்ளார்.  அந்த கதையின்படி ஒரு முறை சிவனும் பார்வதியும் உறவு கொண்டு இருந்த  பொழுது அதனால் பிறக்க இருக்கும் மகன் , மூவுலகையும் அதாவது ஆகாயம், பூமி, பாதாளம் என்ற அனைத்தையும் அடக்கி அங்கு உள்ள அத்தனை தெய்வங்களையும் அடி பணிய வைத்து அவர்களை ஆளும் பராக்கிரமசாலியாக இருப்பான் என எண்ணிய மற்ற தெய்வங்கள் பயந்து போய், அப்படி நடக்கக் கூடாது என அஞ்சி பிரும்மாவிடம் ஓடிச் சென்று அந்த உறவு தடைபெற ஒரு உபாயம் கூறுமாறு கேட்டனர். அதனால் சிவனும் பார்வதியும் உறவு கொண்டிருந்த சமயத்தில் வேண்டும்  என்றே அங்கு  சென்ற பிரும்மா,  ஓம் என்ற மந்திரத்தை அங்கு நின்றபடி தொடர்ந்து உச்சரிக்க,  தன்னை அந்த நேரத்தில் பார்த்து விட்டாரே என அவரைக் கண்டு வெட்கப்பட்ட சிவபெருமான் அங்கிருந்து ஓடி விட்டார். அதனால் கோபமுற்ற பார்வதி மூன்று கடவுட்களையும்- பிரும்மா, விஷ்ணு, சிவன் - அவர்கள் இருந்த இடத்தை விட்டு நகர முடியாதபடி ஆகி விட வேண்டும் என சாபம் இட்டார் . அதனால் அவர்கள் மூவரும் ஆல மரம், அரச மரம்,  வேப்ப மரம் என்ற மூன்று மரங்களாக பிறந்தனர். அந்த தடைப் பட்ட உறவின் மூலம் பிறந்த கார்திகேயப் பெருமான் பார்வதியின் கருவில் வளராமல் வெளியில் இருந்து வளர்ந்தாராம். தனி ஆலயம் இன்றி 'பர்ஸ்வா தேவதா' அதாவது இரண்டாம் பட்சக் கடவுளாகவே கார்திகேயப் பெருமான் வங்காளத்தில் வணங்கப் படுவதின் காரணமும் அதுதான்.